RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt2042

# சிறுபஞ்சமூலத்தில் கற்றறிவாளர்கள் - ஓர் நுண்ணாய்வு

## மு. யூஜின் ரோசிட்டா [அ,*]

[அ] கல்வியியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா.

# Research Scholars in Siruppanjamoolam- A Critical Study

## Ugin Rositta M [a,*]

[a] Department of Education, University of Madras, Chennai-600005 Tamil Nadu, India.

* Corresponding Author: rosittaugin@gmail.com

Received : 29-05-2020
Accepted : 23-07-2020

**ABSTRACT**

Research is the outcome of the shrunken brain, started its search from the soul. Researchers are the ambassadors of learning. The lifelong process called learning determines the height and depth of the research. Development is not possible without research and researchers. This concept has been well established in Siruppanjamoolam, one among the eighteen lesser text anthology of Tamil literature. A collection of 100 poems under this title was written by Kariyaasan- the author. This critical study, attempts to focus on the status of researchers during post Sangam period with reference to Siruppanjamoolam. However the discussion unveiled the relative concepts such as public views on education, duty of research scholar, relationship between the research scholar and the supervisor. Rather surprise to witness the concern of this Tamil anthology on research coursework. The description of guidelines to researchers is significant and equivalent to Research Methodology –a core course for contemporary research students.

**Keywords:** Research, Scholar, Supervisor, Epistemology, Metaphysics.

## ஆசிரியர் குறிப்பு



**முனைவர். மு. யூஜின் ரோசிட்டா**, சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் உதவிப் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். கல்வியியல் தத்துவங்கள் மற்றும் கல்வியியலில் உள்ள சமூகவியல் கோட்பாடுகளைத் தமிழ் இலக்கண இலக்கிய ஆதாரங்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்வதில் ஆர்வம் மிக்கவர். இவர் எழுதிய 'கற்க கசடற - திருக்குறள் கதைகளுடன்' என்ற புத்தகம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் மனித வள மேம்பாட்டு மையத்தின் வளநபர்களில் ஒருவராக இருந்து வருகிறார்.

## முன்னுரை

கற்காலம் தொடங்கி தற்காலம் வரை மனித குலத்தோடு ஒன்றிப்போன ஒரு செயல் கற்றல் ஆகும். மனிதனின் கற்றலே மொழி தோன்ற காரணமாக அமைந்தது. புலன்களே அறிவின் வாயில் என்னும் அனுபவக் கோட்பாட்டை ஆராயும் போது, மனிதன் தான் கண்டு, கேட்டு, நுகர்ந்து, கலந்துரையாடி, உணர்ந்த அனுபவங்களை தனது மேம்பாட்டிற்குப் பயன்படுத்தி, மேன்மையான நிலையை அடைந்துள்ளதை மறுக்க முடியாது. உயிர்களின் பரிணாம (evolution) வளர்ச்சிக்கும் கற்றலுக்கும் உள்ள தொடர்பைப் போன்று உயிர்களின் பரிமான (dimension) வளர்ச்சிக்கும் கற்றலுக்கு தொடர்பு உள்ளது. படைப்பு அனைத்திற்கும் கற்றல் இன்றியமையாதவை. சுவாசிக்கக் கற்றுக் கொள்ளும் போதே கற்றல் தொடங்குகிறது, உடலியல் மற்றும் உளவியல் பார்வையில் நீந்தக்கற்றுக் கொள்ளும் அணுக்கள் மட்டுமே மனித உருபெரும். கற்றல் கலை அறியா அணுக்கள் எச்சங்களாக எறியப்படும். ஒரு வினையைப் புரிந்துக்கொள்ள எடுக்கும் முயற்சியே கற்றல் ஆகும். அவை அனுபவம், பகுத்தறிவு மற்றும் தேடல் என்று மூன்று நிலைகள் மூலம் கண்டு அறியப்படுகிறது (Mouly, 1978).

## ஆராய்ச்சி கற்றறிவாளர்

னுய்ப்பானே யாசா னுயர்கதிக்

(சி.பா.33)

கற்றறிவாளர் தான் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சியில் நுன்புலமையோடு ஈடுபட்டு மெய்யறிவை கண்டடைவதுடன் நிற்காமல் மேற்படி வாழ்கையில் உயர்வடைய நல்லறிவு ஊட்டி மேலான பதவிக்கு மாணவர்கள் சென்றடைய வழிகாட்டுவதால் கற்பிப்போராகிய ஆசான் உயிர்கதிக்கு ஈட்டுச் செல்பவர் என சிறுபஞ்சமூலம் பறைசாற்றுகிறது. அத்தகைய ஆசிரியர்களைப் பின்பற்றும் மாணவர்களை இருவகையாக குறிப்பிடுகிறார் காரியாசன் (Mudaliyar, 1936).

ஆணாக்கம் வேண்டாதா னாசா னவற்கியைந்த
மாணாக்க னன்பான் வழிபடுவான்-மாணாக்கன்
கற்பனைத்து மூன்றுங் கடிந்தான் கடியாதா
னிற்பனைத்து நெஞ்சிற்கோர் நோய் (சி.ப. 28)

ஆசிரியர் மீது அன்பு உடைய மாணவர்கள் - ஒருவகையினர். ஆசிரியரை வழிபடும் மாணவர்கள் மற்றொரு வகை. இந்த இருவகை மாணவர்களும் தான் கற்கும் அளவும் காமம், வெகுளி, மயக்கம் என்ற இம்மூன்று குற்றங்களிலும் விழாமல் விழுமியங்களுடன் வாழ்பவர்களே கற்றறிவாளர் என சிறுபஞ்சமூல ஆசிரியர் உரைக்கின்றார். களிமடி மானி காமிகள்வன்..... பகரார் சுலே என்பதை இலக்கண நூலாகிய நன்னூல் உணர்த்துவது குறிப்பிடத்தக்கது.

## கற்றறிவாளர் கற்க வேண்டிய ஐந்து நூல்கள்

அனுபவம் வழி கற்றலில் ஈடுபாடு அதிகரிக்கும் போது பகுத்தறிவின் கதவுகள் திறக்கப்படும். ஏன்? எப்படி? எவ்வாறு? என்ற கேள்விகளுக்கு விடைத்தேட முற்படும் போது தேடல் தொடங்குகிறது. தேடலில் மூழ்கி மெய்ப்பொருளை கண்டடைய முயற்சிப்பவரே ஆராய்ச்சி மாணவர்கள் (Creswell, 1998). அகர முதலி செந்தமிழ் சொற்களஞ்சியம் கையாளும் விளக்கங்களுள் ஆங்கில வழிச் சொல்லான Scholar என்பதற்கான தமிழ்ப்படுத்துதலில் மாணவர், புலவர், சீடர், பல்கலைக்கழக ஆதரவு பயிற்சியாளர் என பல விளக்கங்கள் காணப்படுகிறது, அதில் சிறந்த ஒன்றாக கற்றறிவாளர் என்னும் தமிழ்ப்படுத்துதலைக் இக்கட்டுரை ஆசிரியர் கையாண்டு உள்ளார்.

கற்றல் மூலம் அறிவை வளர்த்துக் கொண்டவர்கள் கற்றறிவாளர். கற்றது கையளவு; கல்லாதது உலகளவு என்ற உண்மைக்கேற்ப கல்லாத பல கலைகளையும் கற்றுக்கொள்ளும் முயற்சியே இவர்களது தேடலின் தொடக்கமாகும். தேடல் என்பது ஆராய்ச்சியை குறிக்கும். ஆராய்ச்சி என்பது ஆராய்ந்து அறிதல். மெய்ப்பொருள் காண்பது அறிவு என்று வள்ளுவன் வாக்கோடு தொடர்புடையது. எனவே கற்றல் என்பது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஒரு செயலாகும்.

சத்தமெய்ஞ் ஞானந் தருக்கஞ் சமயமே
வித்தகர் கண்டவீ டுள்ளிட்டாங்-கத்தகத்
தந்தவிவ் வைந்து மறிவான் றலையாய
சிந்திப்பிற் சிட்டன் சிறந்து.

(சி.ப. 85)

## சத்தம் நூல்

சத்தம் என்பது இலக்கண நூல்களை குறிக்கும். எத்துறையில் ஆராய்ச்சியை மேற்கொண்டாலும், அதனை உலகிற்கு எடுத்துச் சொல்ல மொழி அவசியமாகும். மொழி என்பது இலக்கண விதி மீறாமல் அறிவுச் சொற்களை பயன்படுத்தி உரைநடை மாறாமல் உலகோருக்கு அளிக்க உதவும் பாலம் ஆகும். இதனையே

நூற்கியைந்த சொல்லின் வனப்பே வனப்பு

(சி.ப. 36)

என முன்வைக்கப்பட்டுள்ளது. தகுதி பொருந்திய நுட்பமான சொற்களை பயன்படுத்துவது என்பது கற்றறிவாளர்களுக்கு உள்ள தனிப்பெரும் சிறப்பாகும். அத்தகைய அறிவார்ந்த எழுத்துகளை கற்றறிவாளர் அறியாமல் போனால் அதை போல் தீமை தருவது வேறு ஒன்றும் இல்லை என்பதனை.

எழுத்தினைக் கல்லாமை தீது

(சி.ப. 50)

என்ற வரிகள் மூலம் விளக்குகிறார் காரியாசான். சத்தம் அல்லது இலக்கணம் என்பது பொருளின் தொடக்கம் பற்றிய ஆய்வில் இருந்து தொடங்கி அதனை ஆராய்ச்சியாளர் கையாளும் விதம் என இயக்கவியல் (Ontological Assumption) முழுமையாக அறிந்துக் கொள்ள

உதவும் நூல்களைக் குறிக்கும் (Cohen *et al.*, 2013), உண்மை நிலையை அதாவது நுண்பொருள் கோட்பாட்டை (Metaphysics) அறிய உதவும் நூல்களைக் கற்க வேண்டும்.

## மெய்ஞான நூல்

மெய்ஞான (Epistemology) நூல் என்பது அறிவின் ஆதாரத்தைக் கண்டறியப் பயன்படும் நூல்கள் ஆகும். அடிப்படை அறிவில் தொடங்கி ஆக்கபூர்வமான (Constructive) உண்மையை அறிந்து தெளிய உதவும் நூல்களைக் குறிக்கும் (Cohen *et al.*, 2013).

## தருக்கம் நூல்

தருக்கம் என்பது அளவை நூல். விவாதங்களை வெல்லும் நோக்கில், தரவுகள் மற்றும் அளவைகளை அடிப்படையாக கொண்டு ஆதார பூர்வமாக மெய்ப்பிக்கும் முயற்சிக்கு உதவும் புள்ளி விவரவியல் (Statistics) மற்றும் ஆராய்ச்சி முறை (Research Methodology) முதலிய நூல்களைக் குறிக்கிறது. இதுவே ஆராய்ச்சியாளர் மூன்றாவதாக கற்க வேண்டிய நூல்கள் (Kumar, R. 2011).

## சமய நூல்கள்

சமய நூல் என்பது ஒருவரின் சமயம் சார்ந்த கொள்கைகளை (religious philosophy) சாரும். சர்வ வல்லமையுள்ள (Omnipotent) பரம்பொருளை (Reality) அடைய தனிநபர் தேர்ந்தெடுக்கும் பாதையை குறிப்பதே சமயம். சமை என்றால் பக்குவப்படுத்தல் என்பது பொருள்.

## வீட்டு நெறி நூல்கள்

இறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள வித்தகர் (அறிவில் மேம்பட்டோர்) எழுதி வழங்கிய வீட்டு நெறி நூல்கள் (Ethics & Moral Values) நூல்கள் ஆகும். இங்கு ஒழுக்கவியலின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. ஒழுக்கமில்லா கல்வி வீணே, இவ்வைந்து வகை நூல்களையும் கற்கும் ஆராய்ச்சியாளர் சிறந்த கற்றறிவாளராக உயருவதில் எள்ளளவும் ஐயமில்லை என்பதே சிறுபஞ்சமூலத்தின் வாதம் ஆகும். இதில் சமயம் சார்ந்த சித்தாந்தங்களும், அறநெறி வளங்களும் மாணவரின் மெய் மதீப்பீட்டு ஆராயும் முறையை (Axiology) உயரச் செய்வது திண்ணம். (Cohen *et al.*, 2013) கற்றோரின் கம்பீரம் அறவழியில் நடப்பதே ஆகும். கற்றறிவாளர்கள் அறம் சார்ந்த அழகை தங்களது பண்புகளாகக் கொண்டு வாழ சிறுபஞ்சமூலம் வழிவகுக்கின்றது.

அறிவு தேடலின் ஒவ்வொரு படியும் எப்படி சாத்தியமாயிற்று என்பதை உறுதிப்படுத்துவதே இத்தகைய நூல்களின் நோக்கமாகும். மெய்ஞ்ஞான நூல்களை கற்பதால் கற்போரின் அனுபவம் பகுத்தறிவு தேடல் ஆழப்படுத்தப்படுகிறது. ஒருவரின் அனுபவம், (experience) புலன்களால் உணரப்படுகிறது. ஒருவரின் பகுத்தறிவு (rational) காரண காரியங்களை தெரிந்துக் கொள்ளுவதாக அறியப்படுகிறது. ஒருவரின் தேடல் (Research) நுணுக்கமாக ஆய்வுகளை மேற்கொள்ள வழி செய்கிறது (Cohen *et al.*, 2013).

இன்றைய காலகட்டத்தில் சமூக அறிவியலில் ஆராய்ச்சி நிறைஞர் மற்றும் முனைவர் பட்டப்படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களின் பாடத்திட்டத்தில் உயர்நிலை ஆராய்ச்சிமுறை (Advanced Research Methodology) முக்கிய பாடநெறியாக இடம் பெற்று இருப்பதும், இப்பாடத்தின் உள்ளடக்கங்கள், பிற்காலச் சங்க இலக்கியங்களில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள பதினெண்கீழ்கணக்கு நூலான சிறுபஞ்சமூலத்தில் எண்பத்தைந்தாவது பாடலில் இடம் பெற்றிருப்பது வியப்பில் ஆழ்த்துகிறது. தமிழ்நாட்டில் சங்க காலத்தில் மேன்மையான முறையில் உயர்கல்வி கற்பிக்கப்பட்டதற்குச் சான்றாக இவை அமைகிறது.

## கற்றறிவாளர்களின் கடமை

னுணவ்குநூ லோதுதல் கேட்டல்மா ணாக்கர்

(சி.ப.29)

என்று காரியாசான் குறிப்பிடுகிறார் (Mudaliyar, 1936), அதாவது நுணுக்கமான நூல்களை கற்பதோடு நில்லாமல் அதனைக் குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடி அறிவை பன்மடங்காக்குவதே கற்றறிவாளரின் தலையாய கடமை என்றும், மேற்சொன்ன ஐந்து நூல்களிலும் புலமை பெறுபவர்களே தலையாய (சீடன்) கற்றறிவாளனாகத் திகழ முடியும் என்கிறது சிறுபஞ்சமூலம்.

சிறைக்கிடந்தார் செத்தார்க்கு நோற்பார் பலநாள்
உறைக்கிடந்தா ரொன்றிடையிட் டுண்பார் - பிறைக்கிடந்
முற்றனைத்து முண்ணா தவர்க்ககீந்தார் மன்னவராய்க்
கற்றனைத்தும் வாழ்வார் கலந்து

(சி.ப.70)

எல்லா நூல்களையும் கற்று அதன்படி தனது நடத்தையில் திருத்தமைவு பெற்றவர்கள் ஆராய்ச்சியாளாராக மட்டுமின்றி அனைத்து நீதி நெறிகளையும் கற்று உணர்ந்து மன்னவராக வாழ்வர். குடிகளைக் காக்கும் உயர் பதவி வகுக்கும் மன்னவர், எல்லா வகையான நீதி நெறி நூல்களையும் பிற நூல்களை கற்றவராக இருத்தல் அவசியமான ஒன்றாக அக்கால வழக்கத்தில் இருந்தது நோக்கத்தக்கது.

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்காற்
பூதரே

(சி.ப.19)

இதனை மேலும் வலியுறுத்தும் விதமாக அறிவு நூல்களைப் படித்தவரே தேவர்களுக்கு சமமாக மதிக்கப்பட்டனர். கல்லாதவர்களை பேய் பிசாசுகளுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நிலை இருந்தது தெரியவருகிறது.

நுன்றுணர்வார் முன்கல்லா னாவுஞ்சா

(சி.ப. 9)

என்னும் இவ்வரிகள் கற்றறிவாளர் முன் கல்லாதவன் நிலையை எடுத்து உரைக்கிறது. இது கல்விக்கு பிற்சங்க காலத்தில் தரப்பட்டிருந்த பெருமையைக் குறிக்கிறது. சரியான விளக்கங்களை கல்லாதவன் கூறும் போது, அதில் நிறைந்திருக்க கூடிய உண்மை

தன்மையும். நுட்பங்களும், ஒரு பொருட்டாக கொள்ளப்படாமல் போன செய்தியை பின்வரும் அடிகள் மூலம் அறியலாம்.

கல்லாதான் றான்காணு நுட்பமுங்

(சி.ப. 3)

## பெரும்புலவன் யார்?

கேட்பவன் கேடில் பெரும்புலவன்

(சி.ப. 32)

தான் கற்றுணர வேண்டிய நூல்கள் மற்றும் கலைகள் பலவும் கற்பதோடு நில்லாமல் அதன் மெய்ப்பொருளை (Metaphysics) கண்டு உணர்ந்து அறிவாதாரத்தை (Epistemology) பெருக்கி மெய்மதிப்பீட்டுடன் (Axiology) உடன் வாழ்பவனே பெரும்புலவன் அதாவது கற்றறிவாளர் ஆவார்.

மூவாது மூத்தவர் நூல்வல்லார்

(சி.ப. 21)

அதிகமான நூல்களை படித்து குறிப்பு எடுப்பது என்பது ஆராய்ச்சி நிறைஞர் மற்றும் முனைவர் பட்டப்படிப்பில் ஈடுபடும் மாணவர்களின் அன்றாட கடமைகளுள் ஒன்று. எவ்வளவு குறிப்புகளைத் தேடிச் சேகரித்து தங்கள் ஆராய்ச்சியில் பயன்படுத்துகிறார்களோ, அந்த அளவிற்கு ஆராய்ச்சியின் போக்கும் செம்மையாக அமையும் என்பது உயர்கல்வி கற்போர் - கற்பிப்போர் மத்தியில் இருக்கும் பொதுவான கருத்து. இதனை பதினென்கீழ்கணக்கு நூல்களின் காலத்து ஆசிரியர்கள் மத்தியில் ஆணித்தரமாக இருந்திருப்பதை நோக்கும் போது உயர்கல்வியில் தமிழர்களின் உன்னதமான பங்களிப்பு பிரமிப்பை ஏற்படுத்துகிறது. குறிப்பாக சிறுபஞ்சமூலத்தின் இருபதாவது பாடலில் நூல்களைக் கற்று தெளிந்தவர்கள், வயதில் இளையவராக இருப்பினும் அறிவினால் மூத்தவர்கள் என்று குறிப்பிடும் ஆசிரியர், பூவாமல் காய்க்கும் மரங்களான பலா, அத்தி, ஆல், அரசு முதலிய மரங்களை உதாரணப்படுத்துகிறார் மேலும் நூல்களை கற்பதால் மூத்தோரான இளையோரின் அறிவு பிறரின் அறிவுரையைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லாமல் தானே அறிவு வழி நடக்கும் உணர்வு பெற்றது என தெளிவுப்படுத்துகிறார்.

மூத்தாலு மூவார்நூ றேற்றாதார்

(சி.ப. 22)

ஆசிரியரின் எழுத்துத் திறமையையும், பொருள் வளமையும் சிறுபஞ்சமூலத்தின் இருபத்தியொன்றாவது பாடலில் சுவைத்து மகிழலாம். அதாவது மூவாது மூத்தார் நூல் வல்லார் என பாடிய ஆசிரியர், அடுத்த பாடலில் சந்தமும் சங்கதியும் குறையாமல் மூத்தாலும் மூவார் நூல் தேற்றாதார் என பொருள் பட உரைக்கிறார். வயதால் மூத்தவராக இருப்பினும் நூல்களை கற்றுத் தெளியாதவர்கள் சிறுமை பட்டவரே என உரைக்கிறார். கற்றல் என்பது தெளிவை ஏற்படுத்தக் கூடிய செயல் என்பது நோக்கதக்கது. இதற்கு பாதிரி முதலிய மரங்களை எடுத்துக்காட்டாக சொல்லும் ஆசிரியர், இத்தகையோரின் மந்த புத்தி யார் அறிவுரை வழங்கினாலும் அறிவு பெறாது என தெளிவுப்படுத்துகிறார்.

## ஆராய்ச்சிக்கு அழகு

எண்வனப் பித்துணையா மென்றுரைத்தல்

(சி.ப. 8)

ஆராய்ச்சியின் விளைவுகளை துணிந்து சொல்லுவதற்கு துணிவு இருக்கும் பட்சத்தில், அத்துணிவே ஆராய்ச்சிக்கு அழகாகும். இன்றை காலச் சுழலில் வியாபார நோக்கில் அதிக அளவு உண்மைகள் வெளிச்சத்துக்கு வராமலேயே பொருட்கள் சந்தைக்கு வந்து விற்பனையில் இலாபம் ஈட்டுகின்றது. பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலேயே ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு குழு பணி அமர்த்தப்படும். அப்படியிருந்தும் மக்களின் நல்வாழ்வுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய தயாரிப்புகள், சந்தைகளில் முன்னனியில் இலாபம் ஈட்டுவது மறுக்கப்படாத உண்மை. அறிவியல் தொழில்நுட்பம் அதிகரித்துள்ள இக்கால கட்டத்தில் அறம் சார்ந்த அறைகூவல் விடுக்கும் இந்த வரிகள் எக்காலத்திற்கும் பொருத்தக் கூடியது. தனிநபர் குறுக்கீடு இல்லாமல் இது இதனால், இப்படியாக என துல்லியமாகத் தெளிவுபட சொல்லுவதே ஆராய்ச்சிக்கு அழகு என்ற காரியாசானின் கூற்று உயர்கல்வியின் உச்சக்கட்டத்தை உறுதிப்படுத்துகிறது (Mudaliyar, 1936).

## ஆராய்ச்சி நெறியாளர்

தேறினா னீடாங்கு செய்தலு நஞ்சா

(சி.ப. 12)

ஆராய்ந்து தெளிந்த ஒருவனை வினைமேற் செலுத்தாது காலம் நீட்டித்தலும் நஞ்சுபோன்றதாகும். ஒரு சில கருத்து வேறுபாடு காரணமாக, பல கற்றறிவாளர்களின் கடின உழைப்பு ஆராய்ச்சி நெறியாளரின் மேசையைத் தாண்டி செல்லாமல், ஆண்டுகளாக படுத்து உறங்குவதை கண்டிருக்கலாம். ஆசிரியர் தர்மம், மாணவர் தர்மம், நெறியாளர் தர்மம், ஆராய்ச்சியாளர் தர்மம் என ஒவ்வொருக்கும் வரையறுக்கப்பட்ட தர்மங்களுக்கு உட்பட்டே கல்வி கற்பிக்கப்படுகிறது. அப்படியிருக்க ஆராய்ச்சியை நெறிப்படுத்த வேண்டிய நெறியாளர்கள், சில நேரங்களில் ஒத்துழைப்பு தராமல் காலம் நீட்டிக்கலாம் அத்தகைய செயல் நஞ்சு போன்றது என்றும்.

கணனடங்கக் கற்றானு மில்

(சி.ப. 30)

எனும் வரிகளின் மூலம் எல்லாம் அறிந்தவர் எரும் இல்லை, ஏதும் அறியாதவரும் உலகில் இல்லை. நல்லியல்பே இல்லாதவர் எவரும் இல்லை; குற்றம் ஏதும் இல்லாதவரும் உலகில் இல்லை. எல்லா கல்வி கலைகளையும் கற்றவனும் இல்லை. எனவே கற்றறிவாளரின் கற்றல் திறன், சூழ்நிலை மற்றும் எதிர்காலத்தை மனதில் கொண்டு நேரிய முறையில் அவர்களை நெறிப்படுத்துவதே ஆராய்ச்சி நெறியாளர்களின் கடமை என்பதை யாரும் மறுத்தல் ஆகாது என்பதை ஆணித்தரமாக உரைக்கப்பட்டுள்ளது.

கற்புடைய பெண்ணமிர்து கற்றடங்கி னானமிர்து

(சி.ப. 3)

கற்றவற்றை முறையாக கற்று அதன்படி அடங்கி வாழ்வது என்பதற்கு உவமையாக பெண்களில் கற்புடையவள் அமிர்தமாவாள். அது போல் கற்றடங்கி நடப்பவர் மனித குலத்தில் அமிர்தமாவார் என்ற வரிகள் உணர்த்துகின்றன. அடக்கம் அமரருள் உய்க்கும் என்னும் குறளை நினைவுப்படுத்துகிறது.

## முடிவுரை

படித்தவர்களை எளிதில் அடையாளப்படுத்தும் விதமாக அவர்களது பேச்சு, நடை, உடை, செயல் என எல்லாவற்றிலும் ஒரு நேர்த்தியை கையாளுவர். மென்மையான வீரம் கல்வி கற்போர் ஒவ்வொருவரிடமும் வெளிப்படுவதை உணர முடியும். உயர் கல்வி ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆராய்ச்சியாளர்களின் அறிவுபூர்வமான வாதங்களும், அதனை தர்க்க ரீதியாக அவர்கள் வெளிப்படுத்தும் முறையும் கேட்பவரின் மனம் ஏற்கச் செய்யும் விதத்தில் அமையும் என்பதை சிறுபஞ்சமூலத்தை மையமாகக் கொண்டு இக்கட்டுரை உறுதி செய்கிறது. மேற்சொன்ன அனைத்திற்கும் காரணமாக அமைவது அவர்கள் தேர்வு செய்யும் நூல்களும், நூலின் கருப்பொருளும், அதனை கற்று அவர்கள் தெளிவு பெற்ற விதமும் ஆகும். நூல்களை கற்கும் போது அது கற்போரிடம் உண்டு செய்யும் நடத்தையில் மாற்றம் (Modification of Behaviour) அதன் வெற்றியாகும் (Mangal, 2013). எல்லாவற்றையும் துறந்த தவசிகளும் பற்றிக்கொள்ள ஆசைப்படும், ஒரு பொருள் என்றால் அது நூல் என சிறுபஞ்சமூலத்தில் பதிவாகியுள்ளது. அத்தகைய மேன்மை மிக்க நூல்களை படித்து அறிவைப் பெருக்கி கற்று அறிந்த கற்றறிவாளராய் திகழ காரியாசான் எழுதி வழங்கிய சிறுபஞ்சமூலம் வழிசெய்கிறது. மேலும் நெறியாளர்களின் கடமையை தெளிவாக முன்நிறுத்தியுள்ளது. பிற்சங்க காலத்திற்கு மட்டுமின்றி இக்கால ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பொருத்தமான ஆராய்ச்சி வழிநெறிகளையும், வள ஆதாரங்களையும் ஐவகை நூல்களாக இனம் காணப்படுவதை இக்கட்டுரை பதிவு செய்கிறது.

## References

Cohen, L., Manion, L. and Morrison, K (2013) Research Methods in Education (seventh edition), *Routledge*, London.

Creswell, J.W (1998) Qualitative Inquiry and Research Design, Thousand Oaks, *Sage*, CA.

Kumar, R. (2011) *Research Methodology a step-by-step guide for beginners*, *SAGE Publications India Pvt Ltd*, New Delhi.

Mangal, S.K, (2013) Essential of Education technology, *PHI Learning Pvt Ltd*, India.

Mouly, G.J. (1978) Educational Research: The Art and Science of Investigation, *Allyn and Bacon*, Boston, MA.

Mudaliyar, P. (1936) Kariyasan Eyatreya Sirupanjamoolam Welakka uraiudal, *The South India Saiva siddantha works publishing society*, Tinnevelly Ltd Madras.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License